**பாடம் - 12**
**பிரதிநிதிகள்,மன்னர்களுக்குக் கடிதம் எழுதுதல்**

**الدرس الثاني عشر**
**الوفود ومكاتبة الملوك**

நபிகள் நாயகத்தைப் பற்றிய செய்தி பரவலானது. உலகெங்கும் அவர்களின் பிரச்சாரம் பரவத்தொடங்கியது. பல்வேறு நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளின் குழுக்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் இணைவதை வெளிப்படுத்தும் விதமாக மதினாவுக்கு வருகை தர ஆரம்பித்தனர்.

இதுபோல நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பல்வேறு நாட்டு மன்னர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்து கடிதம் எழுதத் தொடங்கினார்கள். அந்த அழைப்பை ஏற்று சிலர் நம்பிக்கை கொண்டனர். வேறு சிலர் ஏற்க மறுத்தாலும் நல்ல முறையில் நடந்துகொண்டனர். நபியவர்களுக்கு அன்பளிப்புகளை அனுப்பினர். ஆனால் நபிகள் நாயகம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் சிலர் ஆத்திரமடைந்து நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அனுப்பிய கடிதத்தைக் கிழித்துள்ளார்கள். பாரசீக மன்னர் கிஸ்ரா கிழித்ததைப் போல! ‘இறைவா! அவருடைய அதிகாரத்தைக் கிழித்துவிடு’ என்று நபிகள் நாயகம் அவருக்கு எதிராகப் பிரார்த்தித்தார்கள். அதன் பிறகு சிறிது காலத்திலேயே பாரசீக மன்னருக்கு எதிராக அவருடைய மகனே கிளர்ச்சி செய்து அவரைக் கொன்று விட்டு அவரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினான்.

எகிப்து மன்னர் மகோகிஸ் இஸ்லாத்தை ஏற்கவில்லை என்றாலும் கடிதம் கொண்டு வந்த நபிகள் நாயகத்தின் தூதரை கண்ணியப்படுத்தி, அவருடன் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு அன்பளிப்புகளைக் கொடுத்தனுப்பினார். இவ்வாறே ரோமாபுரி மன்னர் கைஸரும் இஸ்லாத்தை ஏற்க மறுத்தாலும் நல்ல முறையில் நடந்து கொண்டார். கடிதம் கொண்டு வந்த நபிகள் நாயகத்தின் தூதரை கண்ணியப்படுத்தினார்.

பஹ்ரைன் நாட்டு அரசன் முன்திர் பின் ஸாவா என்பவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கடிதம் வந்ததும் பஹ்ரைன் நாட்டு மக்களுக்கு அதைப் படித்துக் காட்டினார். அவர்களில் சிலர் நம்பிக்கை கொண்டனர் வேறு சிலர் மறுத்தனர்.

**நபிகள் நாயகத்தின் மரணம்**

நபியவர்கள் ஹஜ்ஜிலிருந்து திரும்பி சுமார் இரண்டரை மாதத்திற்குப் பிறகு அவர்களுக்கு நோய் ஏற்படத் தொடங்கியது. அது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது. மக்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்த இயலாமலான போது அபூபக்ரை மக்களுக்குத் தொழுகை நடத்தும்படி நபியவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் 12 ஆம் நாள், திங்கட் கிழமை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள். உயர்வு மிக்க நண்பனான அல்லாஹ்விடம் சேர்ந்தார்கள். அப்போது அவர்களுக்கு 63 வயது நிறைவடைந்திருந்தது.

நபியவர்களின் மரணச் செய்தி நபித்தோழர்களிடம் பாவியதும் அவர்கள் உணர்விழந்து போகும் அளவு துக்கம் அடைந்தனர். இச்செய்தியை அவர்கள் நம்பவில்லை. பிறகு அவர்களுக்கு மத்தியில் அபூபக்கர்(ரலி) அவர்கள் உரை நிகழ்த்தி அவர்களை அமைதிப்படுத்தினார்கள். மேலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் மனிதர்தான்ளூ ஏனைய மனிதர்கள் இறந்துவிடுவது போலவே அவர்களுக்கும் இறப்பு உண்டு என்பதை விளக்கிக்கூறினார்கள். பிறகு மக்கள் அமைதியடைந்தனர். அதன் பிறகு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் குளிப்பாட்டப்பட்டு, கஃபன்துணி பொதியப்பட்டு அவர்களின் மனைவி ஆயிஷாவின் அறையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப் படுவதற்கு முன் 40 ஆண்டுகளும் நபியாக ஆன பின் 13 ஆண்டுகளும் மக்காவில் வாழ்நதார்கள். பிறகு மதீனாவில் பத்து ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்கள். அதன் பின்னர் முஸ்லிம்கள் அபூபக்ர் சித்தீக்(ரலி) அவர்களைக் கலீஃபாவாகத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் தான் நேர்வழி பெற்ற கலீஃபாக்களில் முதல் கலீஃபா.